முதன்மைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம், சென்னை – 600 005

அவர்களின் செயல்முறை

முன்னிலை – திரு. அர். இரகுநாதன், எம்.இ. எம்,பி,ஏ,.

ந.க.எண். 42067/2009/பா.சா.தி1 நாள் 29.04.2010

பொருள் – பாதாள சாக்கடைத் திட்டம் – திருவள்ளூர் நகராட்சி – உபவிதிகளுக்கு பொது அங்கீகாரம் வழங்கல் – குறித்து

பார்வை –

1. அரசாணை (3டி) எண். 9 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (நநி5) நாள். 18.04.2007.
2. நகராட்சி ஆணையர், திருவள்ளூர் நகராட்சி கடித ந.க.எண். 4458/2003/இ1 நாள் 08.04.2010.
3. நகர்மன்ற தீர்மானம் எண். 1375 நாள்.29.03.2010.

*******

ஆணை:

படிக்கப்பட்டவையில் காணும் அரசாணையின் படியும் திருவள்ளூர் நகராட்சி ஆணையர் அவர்கள் அளித்துள்ள விவரங்களின் அடிப்படையிலும் நகர்மன்ற தீர்மானத்தின்படியும் திருவள்ளூர் நகராட்சியின் பாதாள சாக்கடைத் திட்டம் தொடர்பாக இணைப்புக் கட்டணம் மற்றும் வைப்புத்தொகை கீழ்கண்டவாறு வசூலிக்க பாதாள சாக்கடைத் திட்ட உபவிதிகளுக்கு பின்வரும் நிபந்தனைகளுடன் பொதுஅங்கீகாரம் (General approval) வழங்கப்படுகிறது.

| குடியிருப்பு அளவு சதுர அடியில் | சேவைக்கட்டணம் | முன்வைப்புத்தொகை |
|---|---|---|
| 500 ச.அடிக்கு குறைவானது | 75/– | 5,000/– |
| 501 முதல் 1200 ச,அடி வரை | 100/– | 6,000/– |
| 1201 முதல் 2400 ச,அடி வரை | 125/– | 7,000/– |
| 2401 ச அடிக்கு மேல் | 105/– | 8,000/– |
| சிறப்பு | 175/– | 10,000/– |

64

| பிற உபயோகம் அளவு சதுர அடியில் | சேவைக்கட்டணம் | முன்வைப்புத்தொகை |
|---|---|---|
| 500 ச.அடிக்கு குறைவானது | 150/– | 10,000/– |
| 501 முதல் 1200 ச,அடி வரை | 300/– | 18,000/– |
| 1201 முதல் 2400 ச,அடி வரை | 375/– | 21,000/– |
| 2401 ச.அடிக்கு மேல் | 750/– | 40,000/– |
| சிறப்பு | 1750/– | 1,00,000/– |

நிபந்தனைகள்

1. தற்போது அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ள உபவிதிகள் மாவட்ட அரசிதழில் (தமிழ் மற்றும் ஆங்கிலம்) பிரசுரம் செய்யப்பட வேண்டும்.
2. பிரசுரம் செய்யப்பட்ட மாவட்ட அரசிதழ்களின் நகல்கள் (மூன்று) இவ்வலுவலகத்திற்கு சமர்பிக்கப்பட வேண்டும்.
3. இது குறித்து பொதுமக்களுக்கு தகுந்த கால அவகாசம் கொடுத்து தகவல் தெரியப்படுத்தப்பட வேண்டும்.
4. பயனாளிகளிடமிருந்து உத்தேசிக்கப்பட்டுள்ள முன்வைப்புத் தொகைகளை வசூல் செய்ய துறை நடவடிக்கை எடுக்கவும் இதன் மூலம் அறிவுறுத்தப்படுகிறது.
5. இறுதி ஒப்புதலுக்கு நகர்மன்ற தீர்மானம் இயற்றி அதன் நகலுடன் அரசிதழில் வெளியிடப்பட்ட துணை விதிகளின் இரண்டு பிரதிகள் (தமிழ் மற்றும் ஆங்கிலம்) அனுப்பி வைக்கவும்.

இச்செயல்முறைகள் பெற்றுக் கொண்டதற்கான ஏற்பளிப்பு உடன் அனுப்பி வைக்க கோரப்படுகிறது.

ஒம்/–இரா.ரகுநாதன்
தலைமைப் பொறியாளர்

பெறுநர்.
நகராட்சி ஆணையர்,
திருவள்ளூர்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

கண்காணிப்பாளர்

நகரின் தூய்மை நமக்கு பெருமை! நகராட்சிக்கு செலுத்த வேண்டிய வரிகளை உடனடியாக செலுத்துவீர்! நகர் முன்னேற்றத்தில் பங்கு பெறுவீர்!!

வாய்மையே வெல்லும்

# திருவள்ளூர் நகராட்சி

TNUDP III

## பொதுமக்கள் பாதாள சாக்கடை முன் வைப்புத்தொகை செலுத்த வேண்டுகோள்



திருவள்ளூர் நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டப்பணி ரூ. 35.39 கோடி தொகை மதிப்பீட்டில் பணியினை மேற்கொள்ள தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி திட்டம் 3ன் கீழ் அரசாணை (3டி) எண்.9/நநி(ம) குவ துறை (குவ5) நாள்:18.04.2007 மற்றும் திருத்திய மதிப்பீடு தொகை ரூ. 54.79 கோடி மதிப்பீட்டிற்கு அரசாணை (டி) எண். 132 / நநி(ம)குவ துறை (நநி 2) நாள்:28.02.2011 நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணி 3 பிரிவு மற்றும் 4 மண்டலங்களாக பிரிக்கப்பட்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக தங்களின் மேலான ஒத்துழைப்போடு நல்ல முறையில் சுமார் 67% பணிகள் முடிவடைந்து அடுத்த ஆண்டு நடைமுறைக்கு வர இருக்கிறது. ஆகவே இத்திட்டத்தில் பொதுமக்கள் பங்குத் தொகையாக சுமார் 5.61 கோடி செலவிட வேண்டியுள்ளதால், பொதுமக்கள் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய கழிவுநீர் குழாய் இணைப்புக்கான முன் வைப்புத் தொகையை (பாதாள சாக்கடை இணைப்புக்கான முன் வைப்பு தொகையை) கீழ்க்கண்ட விவரப்படி நகராட்சி கருவூலத்தில் செலுத்தி இத்திட்டத்தை நல்ல முறையில் நடைமுறைக்கு கொண்டுவர தங்களின் மேலான ஒத்துழைப்பை நல்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

| கட்டிட பரப்பளவு | வைப்புத் தொகை | | மாதக் கட்டணம் | |
|---|---|---|---|---|
| | வீட்டு உபயோகம் | வணிக உபயோகம் | வீட்டு உபயோகம் | வணிக உபயோகம் |
| 500 சதுர அடிக்கு குறைவானது | 5000 | 10000 | 75 | 150 |
| 501 – 1200 சதுர அடிக்கு | 6000 | 18000 | 100 | 300 |
| 1201 – 2400 சதுர அடிக்கு | 7000 | 21000 | 125 | 375 |
| 2401 சதுர அடிக்கு மேல் | 8000 | 40000 | 150 | 750 |
| சிறப்பினம் | 10000 | 100000 | 175 | 1750 |



நகர்மன்ற தலைவர்
திருவள்ளூர் நகராட்சி

பங்களிப்புத் தொகையை செலுத்துவீர்! சுற்றுப்புற சுகாதாரம் மேம்படுத்த உதவுவீர்!!

ஆணையாளர்
திருவள்ளூர் நகராட்சி

பிறப்பு இறப்பு பதிவு செய்வீர்! குடிநீர் கட்டணம் செலுத்துவீர்!! தொழில் வரி செலுத்துவீர், அனைத்து கடைகளுக்கும் உரிமம் பெறுவீர்!

கட்டப்படும் அனைத்து கட்டிடங்களுக்கும் கட்டிட அனுமதி பெறுவீர்! நகராட்சி சொத்தை ஆக்கிரமிப்பு செய்யாதீர்!!

மனை பிரிவுகளில் நகராட்சிக்கு ஒதுக்கப்பட்ட திறந்தவெளி இடத்தை ஆக்கிரமிப்பு செய்யாதீர், காலிமனை வரி செலுத்துவீர்!